## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure )

IN THE COURT OF III ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, GOBICHETTIPALAYAM

| | |
|---|---|
| SC.No. | : 61/2023 |
| P.W. | : 8 |
| Name. | : மருத்துவர். திரு. சங்கர் |
| Father Name | : திரு. சுப்பிரமணியம் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 50 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 23.10.2025.

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை (சாட்சி காவல்துறையினரால் அடையாளம் காட்டப்பட்டார்)**

நான் தற்போது கரூரில் உள்ள அரசு கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் இணைப்பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 02.02.2021 அன்று பெருந்துறையில் உள்ள அரசு கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் உதவி பேராசிரியராக பணியில் இருந்தபோது புளியம்பட்டி காவல் ஆய்வாளர் அவர்களின் கடிதத்தின்படி கு.எண். 71/2021 நாள் 01.02.2021 சுமார் 32 வயது மதிக்கத்தக்க மகேந்திரன் என்ற ஆண் பிரேதமானது பிரேத பரிசோதனைக்காக த.கா. திரு.பழனிச்சாமி அவர்களால் கொண்டுவரப்பட்டது. பிரேத

பரிசோதனை துவங்கிய நேரம் பிற்பகல் 12.35 மணி. பிண விறைப்பு தன்மை உடல் முழுவதும் காணப்பட்டது. சுமாரான போஷாக்குள்ள ஆண் பிரேதத்தில் பின்வரும் இறப்பிற்கு முன் ஏற்பட்ட காயங்கள் இருந்தது. சிவந்த சிராய்ப்பு காயங்கள் 1. 4x3 செ.மீ அளவில் வலது பக்க கன்னத்தில் வெளிப்புறத்தில் காணப்பட்டது. 2. 2x2 செ.மீ அளவில் வலதுபக்க கன்னத்தில் நடுப்பகுதியில் காணப்பட்டது. 3. 11x7-1 செ.மீ அளவில் வலது பக்க கன்னத்தில் வலது காது மடலில் இருந்து 2 செ.மீ உள்நோக்கி காணப்பட்டது. 4. 3x0.5 செ.மீ அளவில் இடதுபக்க நெற்றியின் மையப்பகுதியில் காணப்பட்டது. 5. 6x4-1 செ.மீ அளவில் இடதுபக்க நெற்றியின் வெளிப்புறத்தில் காணப்பட்டது. 6. 6x3 செ.மீ அளவில் இடது பக்க நெஞ்சு பகுதியின் முன்பகுதியின் மேல்பகுதியில் காணப்பட்டது. தலைப்பகுதியை கூராய்வு செய்து பார்த்தபோது தலைத்தோலில் வலதுபக்க தலையின் வெளிப்புறத்தில் சிவந்த கன்றிய காயமானது 8x7 செ.மீx தலைத்தோல் ஆழத்திற்கு காணப்பட்டது. மண்டை ஓட்டு எலும்பு மற்றும் மூளையின் மேல்தோல் நல்லநிலையில் இருந்தது. மூளையில் அடர்ந்த ரத்த கசிவு இடதுபக்கத்தின்ள மேல்புறம் மற்றும்வெளிப்புறத்திலும் நுண்ணிய ரத்தக்கசிவு மூளையின் முழுபரப்பளவிலும் காணப்பட்டது. மண்டை ஓட்டு அடிபகுதி உடையாமல் இருந்தது. கழுத்து பகுதியை கூராய்வு செய்து பார்த்தபோது நாவடி எலும்பு உடையாமல் இருந்தது. மூச்சுகுழல் பகுதி நல்லநிலையில் இருந்தது. நெஞ்சுபகுதியை கூராய்வு செய்து பார்த்தபோது இடப்பக்க விலா எலும்பு 2 மற்றும் 3 அதன்மையபகுதியில் உடைந்தும், அதனை சூழ்ந்து ரத்தக்கசிவு காணப்பட்டது. இருதயம் சரியான அளவில் இருந்தது. அதன் வலதுபக்க அறையில் உறைந்த ரத்தம் காணப்பட்டது. இடது பக்க அறை காலியாக இருந்தது. வால்வுகள் மற்றும் ரத்த

நாளங்கள் நல்லநிலையிலும் எந்த அடைப்பும் இன்றி காணப்பட்டது. நுரையீரல்கள் சரியான அளவில் அதனை கூராய்வு செய்து பார்த்தபோது ரத்தம் தோய்ந்து காணப்பட்டது. வயிற்று பகுதியை கூராய்வு செய்து பார்த்தபோது இரைப்பையில் 120 மிலி அளவில் பழுப்பு நிற திரவம் காணப்பட்டது. குடல்பகுதி காற்றினால் விரிவடைந்து காணப்பட்டது. மண்ணீரல், கல்லீரல் மற்றும் சிறுநீரகங்கள் சரியான அளவிலும், அதனை கூராய்வு செய்து பார்த்தபோது ரத்தம் தோய்ந்தும் காணப்பட்டது. சிறுநீர்ப்பை காலியாக இருந்தது. இடுப்பெலும்பு மற்றும்தண்டுவட எலும்புகள் உடையாமல் இருந்தன. உடல் உள்ளுறுப்புகள் சேகரிக்கப்பட்டு ரசாயன பரிசோதனைக்கு அனுப்பிவைக்கப்பட்டது. TOX.H/363/2021 Dt. 27.02.2021 உடலின் உள்ளுறுப்புகளில் ஈத்தைல் ஆல்கஹால் அல்லது எந்தவித நச்சுதன்மையும் இல்லை என்று சான்று வழங்கப்பட்டது. இறுதி கருத்து --- மேற்கூறிய நபர் தலையில் ஏற்பட்ட காயத்தினால் இறந்திருக்கக்கூடும் என்று இறுதி அறிக்கை வழங்கினேன். **பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.5. TOX.H/363/2021 Dt. 27.02.2021 அ.சா.ஆ.6. இறுதி அறிக்கை அ.சா.ஆ.7.** காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் பிரேத பரிசோதனை மேற்கொண்ட நபருக்கு ஏற்பட்டிருந்த வெளிப்புற சிராய்ப்பு காயங்கள் ஒரு நபர் தவறி கீழே விழுந்தால் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் ஏற்படலாம். தலையில் மூளையில் ஏற்பட்டிருந்த ரத்தக்கசிவு ஒரு நபர் வாகன விபத்தில் கீழே விழுந்தால் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் ஏற்படலாம். தலையில் மூளையில் ஏற்பட்டிருந்த ரத்தக்கசிவை தவிர மேற்படி நபருக்கு உயிருக்கு ஆபத்து

ஏற்படும் அளவில் வேறு காயங்கள் இருக்கவில்லை என்றால் ஆமாம்.

**மறு விசாரணை இல்லை.**

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure )

IN THE COURT OF III ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, GOBICHETTIPALAYAM

| | |
|---|---|
| SC.No. | : 61/2023 |
| P.W. | : 9 |
| Name. | : திரு. வி.கே. செந்தில் |
| Father Name | : திரு. குட்டியப்பன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 38 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 23.10.2025.

**எதிரி ஆஜர்.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது சத்தியமங்கலம் காவல்நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 01.02.2021 அன்று நான் புளியம்பட்டி காவல்நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணியில் இருந்த சமயம் அன்று 10 மணி அளவில் ஆய்வாளரிடம் கடவு சீட்டு பெற்று துரித தபால் அலுவலாக சத்தியமங்கலம் குற்றவியல் நீதிமன்றத்திற்கு சென்று இந்த வழக்கில் பதிவு

செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையை சமர்ப்பித்தேன். மற்றும் உரிய அதிகாரிகளுக்கு தபால்களை சேர்த்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure )

IN THE COURT OF III ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, GOBICHETTIPALAYAM

| | |
|---|---|
| SC.No. | : 61/2023 |
| P.W. | : 10 |
| Name. | : திரு. வி.பழனிச்சாமி |
| Father Name | : திரு. வேலாயுதம் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 63 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 23.10.2025.

**எதிரி ஆஜர்.**

**<u>முதல் விசாரணை</u>**

**நான் தலைமை காவலராக பணியில் இருந்து தற்போது ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 02.02.2021 அன்று புளியம்பட்டி காவல்நிலையத்தில் த.கா.வாக பணியில் இருந்தபோது நிலைய கு.எண். 71/2021 ச.பி. 302 இதச வழக்கில் இறந்துபோன மகேந்திரன் என்பவரின் உடலை பெருந்துறை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனை மேற்கொள்ள ஒப்படைத்தேன். பின்னிட்டு**

பிரேத பரிசோதனை முடித்து உடல் உள்ளுறுப்புகளை இரசயான பரிசோதனைக்காக எடுத்து வைக்கப்பட்டிருந்தது பெற்று அவற்றை கோவை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.